19.07.2024

O.S.No. 219 of 2012

PW1 திரு.துரைசாமி,

குறுக்கு விசாரணை ( 1 முதல் 3 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில்):-

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

இந்த வழக்கை வழக்குச் சொத்துகளை சரிசமமாகப் பிரித்திட வேண்டி தாக்கல் செய்திருக்கிறேன். என்னுடைய மாமனார் பெயர் ஜானகிராமன். ஜானகிராமனின் தந்தைபெயர் முனுசாமி பிள்ளை. முனுசாமி பிள்ளைக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி பெயர் குப்பம்மாள். முதல் மனைவி மூலமாக ஜீவரத்தினம்மாள், ஜானகிராமன் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். இரண்டாவது மனைவி பெயர் ரவா அம்மாள். இரண்டாவது மனைவியின் மகன் மணிவண்னன் தான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி. 1ம் பிரதிவாதி மணிவண்ணனுடன் பிறந்தவர்கள் 4 பெண் வாரிசுகள். மணிவண்ணனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள், இரண்டு பெண்பிள்ளைகள். ஆண் வாரிசுகளின் பெயர்கள் கார்த்திக் மற்றும் யுவராஜ். இந்த கார்த்திக் மற்றும் யுவராஜ் தான் 2 மற்றும் 3 பிரதிவாதிகள். என்னுடைய மாமனார் ஜானகிராமனுக்கு 3 பெண் வாரிசுகள். அவர்கள் ராஜேஸ்வரி, பவானி, தேவிகா ஆகியோர்கள் ஆவார்கள். ஜானகிரானின் மனைவி சகுந்தலா ஏற்கனவே காலமாகிவிட்டார். நான் பவானியின் கணவர். எனக்கு ஒரு ஆண் மற்றும் 2 பெண்பிள்ளைகள் இருக்கின்றார்கள். என்னுடைய மகள்களின் பெயர் கலைச்செல்வி, அம்பிகா, மகனின் பெயர் சங்கரநாரயாணன். இவர்கள் மூவரும் தான் இவ்வழக்கின் 4, 5, 6 பிரதிவாதிகள். ஜானகிராமனின் மற்றொரு மகள் தேவிகா 7வது பிரதிவாதி.

(அறிவார்ந்த 1 முதல் 3 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகின்றது).